உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.71/2024

| | |
|---|---|
| பெயர் | :தீபன் சக்கரவர்த்தி(அ.சா.3) |
| தகப்பனார் பெயர் | :செல்வமணி |
| கணவர் பெயர் | : |
| வயது | :33 |
| கிராமம் | :அய்வத்தான்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :வெளிநாட்டு கம்பெனியில் ஊழியர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

02.06.2025

முதல் விசாரணை:

அ.சா.1 சரவணகுகனை தெரியுமா என்றால் அவர் என் அண்ணன். அ.சா.2 என் அப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 10.01.2023 அன்று நான் வெளிநாட்டில் இருந்து வீடு கட்டுவதற்காக அய்வத்தான்பட்டிக்கு வந்திருந்தேன். 10.01.2023 அன்று ஆஜர் எதிரிகள் காம்பவுண்ட் சுவரை எங்களுடைய இடத்தில் எடுத்து கட்டியிருந்தார்கள். மாலை சுமார் 4.30-5.00 மணி அளவில் ஆஜர் 3வது எதிரி அபிமன்யூவிடம் எதற்காக கட்டுகிறீர்கள் என்று கேட்டார். ஆஜர் 3வது எதிரி எங்களுக்கு அங்கு இடம் இல்லை என்றும், எதற்காக வீடு கட்ட முற்படுகிறீர்கள் என்று அசிங்கம் அசிங்கமாக திட்டினார். பேசிக்கொண்டு இருக்கும் போதே ஆஜர் 3வது எதிரி விட்டிற்குள் சென்று அரிவாளை என்னை வெட்டுவதற்காக எடுத்து வந்தார். அ.சா.1 சரவணகுகன் வெட்ட முற்படும் போது அதை மறித்து விலக்கிவிட்டார். 1வது எதிரி செல்வேந்திரன் 3வது எதிரியின் மகன் இங்கு என்னடா உங்களுக்கு வேலை என்று கூறி என் அண்ணன் அ.சா.1 சரவணகுகனை தலையில் ஓங்கிவெட்டிவிட்டார். ஆஜர் 2வது எதிரி வெற்றிவேந்தன் என் அண்ணன் சரவணகுகனை கையை பின்னால் இறுக்க பற்றி கொண்டார். ஆஜர் 3வது எதிரி அபிமன்யூ என் அண்ணனான அ.சா.1ஐ இரும்பு பைப்பால் கை கால்களில் அடித்தார். என் அண்ணனுக்கு தலையில் ரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. உடனே நான் தான் 108 ஆம்புலன்சுக்கு தகவல்

கொடுத்தேன். அ.சா.1 ஆன சரவணகுகனை கருங்காலக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோ். அங்கு காயம் பெரிதாக இருப்பதால் மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி கூறிவிட்டார்கள். மேலூர் அரசு மருத்துவமனையில் காயம் பெரிதாக இருக்கவே மதுரைக்கு செல்லும் படி கூறிவிட்டார்கள். அதன்பின்னால் மதுரை அரசு மருத்துவமனைக்கு சரவணகுகனை அழைத்து சென்றோம். அரசு மருத்துவமனையில் சரவணகுகனுக்கு தலையில் தையல் போட்டு உள்நோயாளியாக சிகிச்சை கொடுத்தார்கள். மறுநாள் அவரைமருத்துவனையில் இருந்து விடுவித்துவிட்டார்கள். மாலை சுமார் 5 மணியில் இருந்து நேரம் சரியாக நினைவில்லை கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று என் அண்ணன் அ.சா.1 புகார் கொடுத்தார். சம்பவம் நடந்தது தொடர்பாக காவலர்கள் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எ.த.கு.வி :

காவலர்கள் சம்பவம் நடந்த 11.01.2023 அன்றே எங்களிடம் வாக்குமூலம பதிவு செய்து கொணட்ார்கள் கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். சம்பவம் 10.01.2023 அன்று சாயங்காலம் 4.30 மணியில் இருந்து 5.30 மணி இருக்கும் நேரம் சரியாக நினைவில்லை. நான் தான் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தேன். நானும், அ.சா.1 உடன் மருத்துவமனைக்கு சென்றோம். நான் மட்டும் அ.சா.1உடன் ஆம்புலன்சில் சென்றேன். மறுநாள் சுமார் 12 மணியளவில் அரசு இராசாசி மருத்துவமனையில் இருந்து விடுவித்துவிட்டார்கள். அன்று மாலை 4.30-5.30 மணியளவில் கொட்டாம்ப்ட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வேறு எங்கும் செல்லவில்லை. 11.01.2023 அன்று மதியம் சுமார் 3 மணியளவில் நாங்க் அனைவரும் எதிரிகள் தோப்பிற்கு சென்று அங்கு ஆஜர் எதிரிகளை சொத்து

சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையின் விளைவாக வெட்ட முற்பட்டோம் என்றும், தடுக்க வந்த கருப்பாயி என்பவருக்கு கையில் வெட்டுப்பட்டு எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அங்கிருந்து தான் காவலலர்கள் எங்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றும், நாங்கள் நேரடியாக காவல்நிலையம் சென்றோம் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. காவல்துறை விசாரணையில் நாங்கள் நடந்த சம்பவத்தை சொல்ல சொல்ல பதிவு செய்தார்கள்.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.02 18:32:29 +0530

Assistant Sessions Judge

Melur